**செ. கு. எண்:042** **நாள் :16.07.2015**

## <u>என் கேள்விக்கு என்ன பதில்</u>

## <u>கருணாநிதிக்கு மின்துறை அமைச்சர் கேள்வி</u>

---

``கொட்டைப்பாக்குக்கு விலை கூறும் விசுவநாதன் பதில்'' என்ற தலைப்பில் திமுக தலைவர் வழக்கம் போல மீண்டும் பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி மக்களை திசை திருப்பும் வகையில் அறிக்கை ஒன்றை 13.7.2015 அன்று மீண்டும் விடுத்துள்ளார். பல பொய்களை கட்டவிழ்த்து, அதனை உண்மையாக்க முயற்சி செய்யும் கருணாநிதியின் கோயபல்ஸ் வேலை தமிழ்நாடு மக்களுக்கு தெரிந்த ஒன்றுதான்.

அவ்வப்போது அவர் வெளியிடும் முன்னுக்கு பின் முரணான பொய்யான அவரது அறிக்கைக்கு தேவையான விளக்கங்களை புள்ளி விவரங்களுடன் அளித்ததுடன், **என் கேள்விக்கு என்ன பதில்** என சில கேள்விகளை பல்வேறு தருணங்களில் கேட்டிருந்தேன். இப்போதும் அவரை கேட்கிறேன்.

- கூடுதல் விலை கொடுத்து தனியாரிடம் மின்சாரம் அதிக அளவில் 20,355 மில்லியன் யூனிட் அளவிற்கு கொள்முதல் செய்தது யார் ஆட்சிக்காலத்தில் ? திமுக ஆட்சிக் காலத்தில்தானே! ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் 11,075 மில்லியன் யூனிட் மட்டுமே தனியாரிடம் மின்கொள்முதல் செய்யப்பட்டது. அதுவும் தேவைக்கேற்ப தவிர்க்க முடியாத சில நேரங்களில் மொத்த கொள்முதலில் வெறும் 3 சதவீதம் மட்டுமே மின் கொள்முதல் செய்யப்பட்டது. இதற்கு கருணாநிதி ஏன் பதில் அளிக்கவில்லை ?

- திமுக ஆட்சிக் காலத்தில், 4 தனியார் நிறுவனங்களுடன் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்குவதற்கு கீழ்கண்ட தேதிகளில் ஒப்பந்தங்கள் போடப்பட்டு மின் கொள்முதல் செய்யப்பட்டது.

| **தனியார் நிறுவனத்தின் பெயர்** | **ஒப்பந்தம் செய்யப்பட்ட நாள்** |
|---|---|
| பி பி என் | **3.1.1997** |
| சாமல்பட்டி | **22.5.1998** |
| மதுரை பவர் கார்ப்பரேஷன் | **21.5.1998** |
| ஜி எம் ஆர் | **12.9.1996** |

ஒப்பந்தம் போட்டதும் நீங்கள் தான். அதிகமாக மின் கொள்முதல் செய்ததும் நீங்கள்தான். இதை மறுக்க முடியுமா ? செய்வதையெல்லாம் செய்துவிட்டு பழியை எங்கள் மீது போடுவது எந்தவிதத்தில் நியாயம் ?

- மாண்புமிகு அம்மா ஆட்சி காலத்தில்தான் கீழ் வரும் மின் திட்டங்களுக்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, மின் உற்பத்தியும் மாண்புமிகு அம்மா ஆட்சி காலத்திலேயே தொடங்கப்பட்டது என்பதை மூடிமறைத்துவிட்டு, இத்திட்டங்கள் திமுக ஆட்சிக் காலத்தில்தான் ஏற்படுத்தப்பட்டது என்று பொய் சொல்கிறீர்களே இது நியாயமா ?

| திட்டங்கள் | நிறுவு திறன் (மெகாவாட்) | மின் உற்பத்தி செயலாக்க தேதி | திட்டத்திற்கான ஆணை பிறப்பிக்கப் பட்ட நாள் |
|---|---|---|---|
| 2011–12 | | | |
| –பெரியார்–வைகை நீர்மின் உற்பத்தித் திட்டம்–II | 2.5 | 30.01.2012 | GO Ms No.128 dt.15.07.2005 |
| 2012–13 | | | |
| –த.மி.ப.ம.உ. கழகம் மற்றும் தேசிய அனல் மின் நிறுவனத்தின் கூட்டு மின் திட்டம் – வல்லூர் (அலகு–1) | 350 | 29.11.2012 | MoU signed on 12.07.2002 |
| 2013–14 | | | |
| –த.மி.ப.ம.உ. கழகம் மற்றும் தேசிய அனல் மின் நிறுவனத்தின் கூட்டு மின் திட்டம் – வல்லூர் (அலகு–2)<br><br>–வடசென்னை அனல் மின் நிலையம் (நிலை–II அலகு–1)<br><br>–பவானி கட்டளை கதவணை–III<br><br>–பெரியார்–வைகை நீர்மின்திட்டம்–III | 350<br><br>600<br><br>30<br><br>4 | 25.08.2013<br><br>20.03.2014<br><br>16.10.2013<br><br>11.09.2013 | MoU signed on 12.07.2002<br><br>GO 45 (Energy) dt.26.06.2001<br><br>GO Ms.No.27 dt.27.03.2002<br><br>GO Ms.No.100 dt.1.12.2005 |
| 2015–16 | | | |
| –நெய்வேலி அனல் மின் நிலையம்–2 விரிவு, அலகு–2<br><br>–த.மி.ப.ம.உ. கழகம் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் கூட்டு மின் திட்டம் – தூத்துக்குடி (அலகு–1) | 135<br><br>220 | 22.04.2015<br><br>18.06.2015 | MoP Letter No:8/59/94/Th-3 dated 09.03.2004<br><br>MoU signed on 19.06.03 |
| மொத்தம் | 1691.50 | | |

- திமுக ஆட்சிக் காலத்தில் கீழ்கண்ட பல மின் திட்டங்களின் பணிகளை செயல்படுத்தாமல் கிடப்பில் போட்டதற்கு என்ன காரணம்? பத்து பைசாவிற்கு கூட பிரயோஜனம் இல்லை என கருணாநிதி கருதியதுதான் காரணமா? மேலும் தனியாரிடம் அதிக விலை கொடுத்து மின் கொள்முதல் செய்வதற்காகவா?

| திட்டங்கள் | நிறுவு திறன் (மெகாவாட்) | மின் உற்பத்தி செயலாக்க தேதி |
|---|---|---|
| 2011–12 | | |
| பவானி கட்டளை கதவணை–II | 30 | 29.11.2011 |
| சிம்மாதிரி நிலை–II (அலகு–1) (மத்திய தொகுப்பிலிருந்து) | 99.5 | 16.09.2011 |
| பெரியார் நீர்மின்திட்டம் (அலகு–1) | 7 | 14.07.2011 |
| 2012–13 | | |
| சிம்மாதிரி நிலை–II (அலகு–2) (மத்திய தொகுப்பிலிருந்து) | 99.5 | 30.09.2012 |
| பெரியார் நீர்மின்திட்டம் (அலகு–2) | 7 | 11.09.2012 |
| பவானி கதவணை–II | 10 | 26.10.2012 |
| 2013–14 | | |
| மேட்டூர் அனல் மின் திட்டம், நிலை–III | 600 | 12.10.2013 |
| பெரியார் நீர்மின்திட்டம் (அலகு–3) | 7 | 20.11.2013 |
| 2014–15 | | |
| வடசென்னை அனல் மின் நிலையம் (நிலை–II அலகு–2) | 600 | 08.05.2014 |
| கூடங்குளம், அலகு–1 (மத்திய மின்தொகுப்பு) | 563 | 31.12.2014 |
| த.மி.ப.ம.உ. கழகம் மற்றும் தேசிய அனல் மின் நிறுவனத்தின் கூட்டு மின் திட்டம் – வல்லூார் (அலகு–3) | 350 | 26.02.2015 |
| மொத்தம் | 2373.00 | |

- மேற்கண்ட திட்டங்களுக்கு புத்துயிர் அளித்து மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி காலத்தில்தான் செயல்திட்டம் துவக்கப்பட்டும் மேலும் மின் உற்பத்தி செயலாக்கமும் செய்யப்பட்டது என்பதை உங்களால் மறுக்க முடியுமா?

- மேலும், திமுக ஆட்சிக் காலத்திற்குள் பணிகளை முடித்து உற்பத்தியை தொடங்கியிருக்க வேண்டிய பல திட்டங்களில் 40 – 45 சதவீத வேலை மட்டுமே முடிக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் மீதமுள்ள பணிகள் அனைத்தும் புயல் வேகத்தில் செய்து முடிக்கப்பட்டு உற்பத்தியை தொடங்கப்பட்டதா இல்லையா ?

| திட்டங்கள் | நிறுவு திறன் (MW) | ஒப்பந்தத்தின்படி செயலாக்கத்திற்கு வரவேண்டிய தேதி | திமுக ஆட்சி காலத்தில் பணிகள் நடைபெற்றது | செயலாக்கத்–திற்கு வந்த தேதி |
|---|---|---|---|---|
| வடசென்னை அனல் மின் நிலையம் (நிலை–II அலகு–1) | 600 | 18.5.2011 | 40 சதவீதம் | 20.3.2014 |
| வடசென்னை அனல் மின் நிலையம் (நிலை–II அலகு–2) | 600 | 16.11.2011 | 40 | 8.5.2014 |
| மேட்டூர் அனல் மின் திட்டம் நிலை3 | 600 | 23.9.2011 | 45 | 12.10.2013 |

- மேற்கண்ட திட்டங்களில் ஏற்பட்ட கால தாமதத்திற்கு யார் பொறுப்பு ? கால தாமதத்தால் ஏற்பட்ட பெரும் இழப்பிற்கு யார் பொறுப்பு என்பதை நீங்கள் கூறுவீர்களா ?

- மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட பல்வேறு திட்டங்களை நீங்கள் தொடங்கியதாகக் கூறுவது எந்தவிதத்தில் நியாயம் ?

- பல மின் திட்டங்களை ஏட்டளவில் அறிவித்துவிட்டு, அறிவித்த திட்டங்களின் மூலம் உங்கள் ஆட்சிக் காலத்தில் ஒரே ஒரு யூனிட் மின்சாரமாவது உற்பத்தி செய்தீர்களா ?

- திமுக ஆட்சிக் காலத்தில், ஆற்காடு வீராசாமி அவர்கள் ``தேர்தலில் திமுக தோல்வியுற்றால் அதற்கு காரணம் மின்வெட்டுதான்'' என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்தாரா ? இல்லையா ?

- மானாட மயிலாட நிகழ்ச்சிக்காக செலவிட்ட நேரத்தில், சிறிது நேரத்தை மின்துறைக்காக ஒதுக்கியிருந்தால், தமிழ்நாட்டில், உங்கள் ஆட்சிக் காலத்தில் நிலவி வந்த 10 முதல் 12 மணி நேரம் மின் வெட்டை தவிர்த்திருக்கலாம் அல்லவா ?

- திமுகவின் ஆட்சிக் காலத்தில் உடன்குடி திட்டத்தை தொடங்க விரும்பாமல் கிடப்பில் போட்டுவிட்டீர்கள். பத்து பைசாவிற்கு கூட பிரயோஜனம் இல்லை என்பதால் கிடப்பில் போட்டீர்களா ? மாண்புமிகு அம்மா அவர்களால் உடன்குடி திட்டம் செயல்படுத்தப்படக் கூடாது என கங்கணம் கட்டி, திட்டங்கள் வராமல் இருக்க குறுக்கு வழிகள் அனைத்தையும் கையாண்டு, சீன நிறுவனத்தின் கூட்டு நிறுவனமான தனியார் நிறுவனத்துடன் கைகோர்த்து வழக்கு தொடுத்து திட்டத்தை தடுத்து

நிறுத்துவதற்கு பின்னணியில் இருப்பவர்கள் ஸ்டாலின் குடும்பத்தினர் என்று செய்தி வருகிறதே! இது உண்மையா ?

பல கேள்விகள் என்னால் கேட்கப்பட்டும், அதற்கு பதில் அளிக்காமல் கல்லுளிமங்கனாக இருந்துவிட்டு, ஆழ்ந்த உறக்கத்திற்குப் பின்னர் பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டை பாக்கு விலை பத்து பைசா என கூறி மீண்டும் அறிக்கை விட்டுள்ளார்.

ஆதாயமின்றி எந்த ஒரு காரியத்தையும் செய்ய எண்ணாத கருணாநிதிக்கு, மல்லாந்து துப்பினால் மார்பின் மேலே என்பது போல, அவரையே அவர் அசிங்கப்படுத்திக்கொள்கிறார்.

மேற்கண்ட மின் திட்டங்களின் மூலம் திமுக ஆட்சிக் காலத்திலேயே மின் உற்பத்தியை துவக்கியிருந்தால், திமுக ஆட்சியில் அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது. பல மின் திட்டங்களை திமுக ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது என மார்தட்டிக்கொள்ளும் கருணாநிதி அத்திட்டங்களின் மூலம் ஒரு யூனிட்டாவது மின்சாரம் உற்பத்தி செய்தாரா ? நிச்சயமாக இல்லை. திமுக ஆட்சிக்காலத்தில் அறிவிக்கப்பட்ட ஒருசில மின் திட்டப் பணிகளில், 40 சதவீதம் முதல் 50 சதவீத அளவிற்கே பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சியின் காரணமாக பல்வேறு புயல்வேக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மீதமுள்ள பணிகள் முடிக்கப்பட்டு மின் உற்பத்தி துவங்கப்பட்டது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட திட்டங்களையெல்லாம் உங்கள் ஆட்சிக் காலத்தில் தொடங்கியது போல கூறுவது முழு பூசணியை சோற்றில் மறைக்கும் முயற்சி.

முந்தைய ஆட்சியாளர்கள் காங்கிரஸ் கட்சியோடு கூட்டணி அமைத்து பங்கேற்ற போதிலும், கூடங்குளம் மின் உற்பத்திப் பணியை துரிதப்படுத்துவதற்கு கருணாநிதி எந்தவித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை ஏன் என்பதை மக்களுக்கு விளக்கத் தயாரா ?

தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் மத்திய மின் திட்டங்களின் மூலமாக புதிய மின் உற்பத்தி மற்றும் நீண்ட கால கொள்முதல் மூலம் 5346.50 மெகாவாட் மின் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் சொன்னதும் இதே தான். இதில் என்ன தவறு இருக்கிறது. கருணாநிதி புரியாமல் பேசுகிறார் அல்லது புரிந்தும் வேண்டும் என்றே குற்றம் சுமத்துகிறார்.

மேற்கண்ட எனது அறிக்கையில், என்னென்ன திட்டங்களின் மூலம் எவ்வளவு மின் உற்பத்தி செய்யப்படுகிறது, எந்த நாளில் இருந்து மின் உற்பத்தி துவங்கப்பட்டது மேலும் நீண்டகால மற்றும் நடுத்தர கால ஒப்பந்த அடிப்படையில் மின் கொள்முதல் போன்ற விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தும், அதை தெளிவாக சரிவர புரிந்து படிக்காமல், நுனிப்புல்லை மேய்வது போல மேம்போக்காக படித்துவிட்டு மேதாவித்தனமாக கேள்வி கேட்டுள்ளார்.

**13.7.2015** நாளிட்ட தனது அறிக்கையில் கருணாநிதி மீட்டர் வாங்குவதின் மீதான தனி ஒரு நபரின் மீதான குற்றச்சாட்டின் மீது பதில் சொல்லவில்லை என கருணாநிதி கூறியுள்ளார். மின் அளவிகள் ( Meters ) வாங்கும்போது திறந்தநிலை ஒப்பந்த புள்ளிகள் (open tender) பெறப்பட்டு, குறைந்த விலை அளித்த தொழில்நுட்ப, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களுக்கு மட்டுமே மின் அளவி வழங்க மின்வாரிய இயக்குநர்கள் குழுவால் ( Board of Directors)

ஒப்புதலளிக்கப்படுகிறது. ஆகவே மின் அளவிகள் வாங்குவதில் முறைகேடு என்ற கருத்து விஷமத்தனமானது. வன்மையாக கண்டிக்கத்தக்கது.

இந்த நிலைத்த மின் அளவிகளை (static meters) வாங்குவதற்காக முதன்முதலில் திமுக ஆட்சிக் காலத்தில் தான் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இந்த உண்மையாவது கருணாநிதிக்கு தெரியுமா ? நீங்கள் தொடங்கியதை நீங்களே குறை கூறுவது எந்த விதத்தில் நியாயம். நிலைத்த மின் அளவிகளை உபயோகப்படுத்துவது தமிழ் நாட்டில் மட்டுமல்ல. இந்தியாவின் பல மாநிலங்கள் இவை உபயோகப்படுத்தப்படுகின்றன.

ஏற்கனவே உபயோகத்திலிருந்த மின் இயந்திர மின் அளவிகளில் (Electro-mechanical meter) (accuracy 2) துல்லியமான கணக்கீடுகள் பெறப்படாததால் நிலைத்த மின் அளவிகள் (static meter) (accuracy 1) வாங்கப்படுகிறது. எனவே வாரியத்தின் வருவாயில் 20% அதிகமாகிறது. இதனால் மின்நுகர்வோருக்கு எவ்வித சுமையும் இல்லை. மின் நுகர்வோர் தாங்கள் உபயோகித்த மின்சாரத்திற்குண்டான கட்டணத்தை மட்டுமே செலுத்துகின்றனர். எனவே, மின் நுகர்வோரின் தலையில் சுமை என்ற வீணான வதந்தி பரப்புவதை தவிர்க்க வேண்டும்.

எனவே மீட்டர் வாங்குவதில் முறைகேடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை உறுதிபட கருணாநிதிக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் அபரிமிதமான சூரிய மின்சக்தி இருப்பதை கருத்தில் கொண்டு தமிழக அரசானது தமிழ் நாடு சூரிய மின்சக்தி கொள்கையை வெளியிட்டது அக்கொள்கையின்படி 3,000 மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் 2015 ஆம் ஆண்டிற்குள் நிறுவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மேற்கண்ட சூரிய மின்சக்தி கொள்கையை தமிழ் நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் ஏற்றுக்கொண்டது.

தமிழ் நாடு சூரிய மின் சக்தி கொள்கையின் இலக்கான 3,000 மெகாவாட்டுக்கான சூரிய மின்சக்தி நிலையங்களை நிறுவிட, தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 12.09.2014 தேதியிட்ட ஆணை எண் 7/2014 –ல் "விரிவான சூரிய மின்சக்தி விகிதப்பட்டி" வெளியிட்டது. அந்த ஆணையில் சூரிய மின் சக்தி கொள்முதல் விலை யூனிட் ஒன்றுக்கு ரூ.7.01 ஆக நிர்ணயிக்கப்பட்டது. சூரிய மின் சக்தி கொள்முதல் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு இல்லை. அதற்கான அதிகாரம் தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்திற்கு மட்டுமே உள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் சூரிய மின்சக்தி கொள்முதல் விலை யூனிட் ஒன்றுக்கு ரூ.7.01 என நிர்ணயம் செய்தது. இந்த விலை நிர்ணயம் செய்த TNERC உறுப்பினர்கள் 3 பேரில், கருணாநிதிக்கு மிகவும் நெருங்கியவரும், மேலும் அவரது தொடர்பில் உள்ளவர் என்று சொல்லப்படுபவருமான திரு. நாகல்சாமியும் இடம் பெற்றிருந்தார்.

சூரிய மின் சக்தி மூலம் 3000 மெகாவாட் மின் உற்பத்தி என்ற திட்டம் என்ன ஆனது என முதலில் கருணாநிதி கேட்டார். சூரிய சக்தி மூலம் ஆண்டுக்கு 1000 மெகாவாட் மின்சாரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவுடன் அதிலே முறை கேடு, இதிலே முறைகேடு அதிலே குறை இதிலே குறை என குற்றம்சாட்டி வருகிறார். அதானி

குழுமத்திற்கு ஆதாயம் ஏற்படும் வகையில் அக் குழுமத்திடம் மட்டுமே ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது; மற்ற யாரிடமும் ஒப்பந்தம் போடப்படவில்லை என்றும், சூரிய மின்சக்தியை கொள்முதல் செய்வதில், சிறு முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்தபட வில்லை என்றும் சொல்லிவரும் கருணாநிதி அவர்களே, சூரிய கொள்முதல் செய்வதற்காக இதுவரை 43 நிறுவனங்களிடமிருந்து 1214 மெகாவாட் அளவிற்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. அதானி குழுமத்துடன் ஒப்பந்தம் போடுவதற்கு முன்பே 31 சிறிய மற்றும் நடுத்தர சூரிய மின் சக்தி உற்பத்தியாளர்களிடம் 436 மெகாவாட் அளவிற்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்ற உண்மை கூட தெரியாமல் வாய்க்கு வந்தபடி பொறுப்பில்லாமல் இல்லாததையும், பொல்லாததையும் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாம்.

அதானி மட்டுமல்ல, அதானியை விட பலமடங்கு கோடீஸ்வரரான கருணாநிதியோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களோ விதிமுறைகளுக்கு உட்பட்டு, தேவையான நில உரிம ஆவணங்களுடன் சூரிய மின்சக்தியை உற்பத்தி செய்வதற்கு விண்ணப்பிக்கலாம்.

வெளிமாநிலங்களில் சூரிய மின்சக்தி மின்சாரம் ஒரு யூனிட் ரூ 5.40க்கு கிடைக்கும்போது ரூ 7.01 என்ற அதிகமான விலை கொடுத்து வாங்குவது ஏன் என கேள்வி கேட்டுள்ள கருணாநிதி எந்த மாநிலத்தில் அந்த விலைக்கு மின்சாரம் கிடைக்கிறது என்ற விவரங்களை தெரிவிக்கவில்லை. வெளிமாநிலங்களிலிருந்து 1 யூனிட் மின்சாரம் ரூபாய் 5.40க்கு மின்சாரம் கிடைக்கிறது என்பது அப்பட்டமான பொய்க்கு உதாரணம் ஆகும். இதுபோன்ற பொய்யான தகவல்களை தருவதை அவர் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

எந்த மாநிலத்திலும் சூரிய சக்தி மின்சாரம் ஒரு யூனிட் ரூபாய் 5.40–க்கு கிடைப்பதில்லை. எனவே ரூ 5.40 விட அதிக விலைகொடுத்து ஒப்பந்தப்படி 25 ஆண்டுகளுக்கு மின்சாரம் வாங்கினால் ரூபாய் 23 ஆயிரம் கோடி இழப்பு ஏற்படும் என்று கூறுவது சினிமாவுக்கு மிஞ்சிய கற்பனை கதையாகும்.

இந்தியாவில் உள்ள வெவ்வேறு மாநிலங்களில் கீழ்கண்ட சூரிய மின் சக்தி கொள்முதல் விலை பின்பற்றப்படுகிறது:

| வரிசை எண் | மாநிலத்தின் பொயர் | வீதப்பட்டி (ரூ. / அலகு) | வருடம் |
|---|---|---|---|
| 1. | மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் | 7.04 | 2015–2016 |
| 2. | குஜராத் | 8.97 | 2015 |
| 3. | பீகார் | 7.87 – 8.75 | 2014–2015 |
| 4. | உத்திர பிரதேசம் | 7.02 – 8.60 | 2015–2016 |

12.9.2014 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் வெளியிட்ட ஆணையை, தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையமே சுயமாக 1.4.2016 வரை நீட்டித்தது. கருணாநிதி கூறி உள்ளது போல் அதானி குழுமம் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட கால நீட்டிப்பு செய்யப்படவில்லை.

அவதூறான அறிக்கைகளை அவ்வப்போது வெளியிட்டு மக்களை திசை திருப்ப முயற்சிக்கும் கருணாநிதியையும், சில கத்துக்குட்டி அரசியல்வாதிகளையும் மக்கள் நன்கு அறிவர். கருணாநிதியின் கபட நாடகம் தமிழ்நாட்டு மக்களிடம் ஒருபோதும் எடுபடாது. எனவே, பொய்யான அறிக்கைகளின் மூலம் தமிழக மக்களை ஏமாற்றும் முயற்சியில் இனிமேல் இறங்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நத்தம் இரா.விசுவநாதன்
மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**